**செய்தி வெளியீடு எண்: 55/2023** **நாள்: 26.04.2023**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் 2-ல்**
**மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை ரூ.299 கோடியே 46 லட்சம் மதிப்பில்**
**பாதை பணிகளுக்கு ஒப்பந்தமானது**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2 வழித்தடம் 3-ல் மாதவரம் பால்பண்ணை முதல் சோழிங்கநல்லூர் வரையிலான சுரங்கப்பாதை மற்றும் உயர்மட்ட பகுதியில் பாதைகள் அமைத்தல், நிறுவுதல், சோதனை செய்தல் மற்றும் அதன் தொடர்பான அனைத்து வகை பணிகளுக்கும் ரூ.299 கோடியே 46 லட்சம் மதிப்பில் லார்சன் & டூப்ரோ நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட திட்டத்திற்காக ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவியாகும். இது சென்னை மெட்ரோ இரயில் திட்டம் இரண்டாம் கட்டத்திற்கான கடைசி டிராக் ஒப்பந்தம் ஆகும்.

இந்த ஒப்பந்தத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக திட்ட இயக்குநர் தி. அர்ச்சுனன் மற்றும் லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் சார்பாக மெட்ரோ வணிகப் பிரிவின் துணைத் தலைவர் சுனில் கட்டார் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் எஸ். அசோக் குமார், (தடங்கள் மற்றும் உயர்நிலை கட்டுமானம்), கூடுதல் பொது மேலாளர் டி. குருநாத் ரெட்டி, (ஒப்பந்த கொள்முதல்), பொது ஆலோசகர்கள் மற்றும் லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

**வெளியீடு**: **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்**, **சென்னை – 600 035.**